உ கணபதி துணை.

அரிச்சந்திரசரித்திரம்

இஃது

திருத்தணிகைச்

சரவணப்பெருமாளையர்

காஞ்சீபுரம்

ஆறுமுகதேசிகர்-குமாரர்

குமாரசுவாமிதேசிகர்

இவ்விருவராலும்

பரிசோதித்து

அடிமடக்குப்பாட்டுகளுக்குஉரைசெய்து

இடைமச்சி

வடமலைப்பிள்ளைகுமாரர்

வீராசாமிப்பிள்ளை

கேட்டுக்கொண்டபடி

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

ஹேவிளம்பி(வரு) பங்குனிமீ

இதன்விலை ரூ. ௩. ௨.

1839

இச்சரித்திரத்திற்பிரிவு.

பக்கம்.	காண்டம்.	பாடல்.
௧	பாயிரம்.	௰௨.
௩	நாட்டுச்சிறப்பு.	௫௰௮.
௰௩	நகரச்சிறப்பு.	௬௰௪.
௨௨	விவாககாண்டம்.	௬௱௮.
௮௨	இந்திரகாண்டம்.	௪௰.
௯௨	வஞ்சனைக்காண்டம்.	௯௨.
௱௭	வேட்டஞ்செய்காண்டம்.	௯௰.
௱௨௫	சூழ்வினைக்காண்டம்.	௱௯௪.
௱௫௧	நகரநீங்கியகாண்டம்.	௱௫௪.
௱௮௧	காசிகாண்டம்.	௭௰.
௱௯௫	மயானகாண்டம்.	௱௯௯.
௨௱௭	மீட்சிக்காண்டம்.	௭௩.
௨௱௬௰	உத்தரகாண்டம்.	௨௯.

ஆ விருத்தம் - ௩௨௱௰௨.

அச்சிற்பதித்தவர்
சிறப்பு

மழைவளஞ் சுரப்ப வாழ்மை நிலத்தவர்க்கெல்லாம், விழைவளமுறுநெறிவிடாதபன்னூல்களும், இம்மைமறுமைவீடெனப்படுமூவகைச், செம்மைநிலைபெறத்தெரித்தபல்லறங்களில், வாய்மைபோலொருவர்தமனத்தழுக்கைக்கழீஇத், தூய்மைசெய்தக்கது சொல்லின்வேறின்மையின், அத்தகுவாய்மையினருமையும் பெருமையும், இத்தலத்துணர்த்துதற்கெய்தியபல்கதைகளில், நாடுநகரமுநவமணிகுயிற்றிய, வீடுமுலப்பிலாவெறுக்கையுமிழந்து, வடமீன்வெரிந்தாவாய்த்தகற்பணங்கையும், கடனேர்மழலைவாய்க்கான்முளைதன்னையும், விற்றொருபுலையனேவியாட்பட்டுப், புற்றரவான்மகன்பொன்றவம்மனைவியைக், கோறல்செய்முயற்சிகைக்கொண்டிடப்பெற்றும், மாறல்செய்யூழ்வலிமாட்சியினாமெனு, நிலையிலாமெய்யினைநிலையெனக்கொளாது, நிலையுடைமெய்யையேநிலையெனக்கொண்டு, விழைந்தருள்கடவுளர்மேதகுவரத்துடன், இழந்த வாழ்வனைத்துள தனைத்தையு மெய்திய, தேர்ந்தசீரரிச்சந்திரன்சரித்திரந்தனை, ஆய்ந்தெழுதாவெழுத்தாக்குகவென்றதீ, தொன்னலந்தழுவியதொண்டைநன்னாட்டினில், கன்னலின்சாறுபாய்கடிகமழ்வயலிடைச், செந்நெலங்கன்னலிற்கெழுமித்தினிதோங்கும், மன்னுபொற்புரிசைமிடைமஞ்சிமாநகரோன், மன்னவையுள்ளோர

னெனவருடபூமிமைறமோல், வெண்ணெயுண்டெக்
குலமேமவிருமனார்த்தலன், அக்குலத்தனிலுதி
த்தவனடிக்கடிம்பூண், டெக்குணங்களுந்தனை
யிடங்கொளவாழ்பவன், வடமலைதாயிலுமம்மா
றிகொருவேளென, வடமலையெனும்பெயர்வள்
ளல்பாற்றோன்றியோன், நடங்குநூன்மருங்கி
னர்நோக்கெனுமணியொடு, மடங்குகான்றேமி
றகுழ்மல்லையந்தொடையினுன், காவலர்கற்பக
க்காவலருங்கொடை, பாவலருணாதமிழ்ப்பா
வலர்புகழினுன், பாராசாமியம்படைத்திடுமெ
னும்பொறை, வீராசாமிமால்விளம்பினனுக, இ
ப்படிபிசையிலீதியாவர்க்கு மினிதென, அப்ப
டியகமகிழ்வமைவரப்புரிந்தனன், புரியோர்
றிதுமபொற்புடைத்தாயறம், புரிவோர்குழாங்
கொடுபொருந்துசீர்க்காஞ்சியில், காழியம்பதி
வருகவுணியரருள்பெறீஇ, வாழருட்கண்ணுடை
வள்ளலார்பகுத்த, அமரர்புகழ்தொண்ணூற்
ரூறுவள்ளல்களிற், குமாரவள்ளலென்றுருசந்த
த்தியோன், அருந்தமிழ்ப்புலமையினரிவர்க்கிணை
யெனப், பொருந்திநாற்றிசையிலும்புகழ்வளர்
காட்சியன், வெறுமுகஞ்செயாதேவரும் விரு
ம்புசீர், ஆறுமுகதேசிகனருந்தவத்தால், வந்தி
டு குமார சுவாமி வள்ளலென், றுந்துநற் சிறப்
பொடுமோங்குநாவலனே.............

உ. கணபதி துணை.

அரிச்சந்திரசரித்திரம்.

பாயிரம்.

கடவுள்வணக்கம்.

கணபதிகாப்பு.

பரிதிதன்மரபில்வருபார்த்திவன்
விரிதரும்புகழ்மேவரிச்சந்திரன்
சரிதமன்னுந்தமிழ்க்குத்துணைசெயக்
கரிமுகன்பதங்கைதொழுதேத்துவாம்.

(பரமசிவன்.)

சீர்கொண்டசெழுங்கமலத்திசைமுகனு
நெடுமாலுஞ்சிவனுமென்னப்
பேர்கொண்டமூவுருவுமீருருவு
மோருருவாய்ப்பிறங்குந்தொல்லை
நீர்கொண்டவண்டத்துந்தாவரத்துஞ்
சங்கமத்துநிறைந்துநின்றோன்
ஏர்கொண்டதாளிணைகடமைக்கொண்ட
வன்பிறைஞ்சுதலைமேற்கொள்வாம். (க)

(இதுவுமது.)

புகலரியசதுமறையாய்மறைப்பொருளா ※
யுபநிடத்தாய்ப்பூதமைந்தாய் ※
அகிலரூபமாய்மன்னுயிராயணுவிலணு ※
வாயவற்றினகமாய்மேலாய் ※
பகலிரவென்றறியாதபராபரமா ※
யருசடயப்பகுதியாகிச் ※
சகலரூபமாய்நிட்களமாய்நின்றோன்றன் ※
செழுங்கமலசரண்புக்கேமால். (௨)

(இதுவுமது.)

ஆதியாயண்டபகிரண்டத்து ※
மப்புறத்துமடங்காதுற்ற ※
நீதியாய்மணியொளியும்பாற்சுவையு ※
மெனவனைத்துநிறைந்துநின்றும் ※
பாதியாவொன்றாகியுருவாகி ※
யுருவாகிப்பரந்துமல்குஞ் ※
சோதியான்முடிகூட்டத்தனதிரு ※
வடிகூட்டத்தணிந்தனேயோன். (௩)

(உமாதேவி.)

கனத்தாள்வெங்கயமுகனுங்கந்தனுஞ்சம் ※
பந்தனும்பாலுண்டகும்ப ※
தனத்தாளையறம்வளர்த்தகரத்தாளை ※
திரிபுரங்கடழலாய்வேவச் ※
சினத்தாளைசிறியோர்கள்செய்தபிழை ※
பொறுத்திரக்கஞ்செய்யுஞ்செய்ய ※
மனத்தாளைநின்கமலமலர்த்தாளை ※
யென்றலைமேல்வைத்தாள்வாயே. (௪)

(விநாயகக்கடவுள்.)

ஐயாம்பன் முகத்தானை மறலியையோ - ✻
டத்தூரத் துவாழ்வதென்றும் - - - ✻
மெய்யாம்பன் முகத்தானும் வேதத்து - - ✻
மாகமத்தும் விரித்ததன்றே - ✻
மொய்யாம்பன் முகத்தானைப் பொடியாகப் - ✻
பொருதுவினை முடித்து நீண்ட - ✻
கையாம்பன் முகத்தானைக் காலையினு - - ✻
மாலையினுங் கருதுவோர்க்கே. - (௧)

(முருகக்கடவுள்.)

பெருமையினுங் கதிமையினு முதுமையினு - ✻
முகிலெனவே யிறங்குமேனிக் - - ✻
கருமையினுங் கடுந்தறுகட் செம்மையினும் - ✻
வெம்மையினுங் கலங்கேன் காலா - - ✻
எருமையினும் வெள்ளாட்டுப் போது - ✻
மெனட்பிறனாயெண்ணேனன்பால் - ✻
வரு†மையினும் பொருமையினும் வரதன்மகன்
குகனுமென்றன் மனத்திலுண்டே - (௨)

(வேறு - காளி.)

அந்தரியாமளையமலையாலகாலி - - ✻
யம்பிகைமாதரிகௌரியாளியூர்தி - - ✻
வந்தரிநான்முகன்வணங்குமலர்த்தாட்சூலி - - ✻
வைரவிதாருகவைரிமதங்கிநீல - - ✻
சுந்தரியோகினிசூலிநீலிநாக - - - - ✻
கங்கணிசங்கரிவிமலைகாளிவாலை - - ✻

† [illegible]

சுந்தரி சாமுண்டிதிரிசூலிகோலத் — — — ✻
றுணையடியென்முடிமீதுசூடினேனே. (எ)

(கலைமகள்.)

மருப்பவரேவாக்குவிந்துதிரண்டுமுத்து — — ✻
வடமலிந்துகுடமெனவேவயங்கிச்செம்பொற்
பொருப்பவளவாவளர்ந்துததும்பிவிம்மிப் — ✻
புடைபரந்துகரைபநறும்புளகக்கொங்கைத் ✻
திருப்பவளவாயாளைத்தேனைமானைச் — ✻
செழும்படிகநிறத்தாளைத்திகழ்வெண்கஞ்சத்
திருப்பவளையுலகேழுமீன்றதாயை — — ✻
யெனதிதயகமலத்தேயிருத்தினேனே.— (அ)

அவையடக்கம்.

(வேறு.)

நீர்கொள்வார்பாலோடுநேருற்றாற் — ✻
பதர்கொள்வார்நெல்லோடுற்றால் — — ✻
தார்கொள்வார்பூவுற்றால்வேர்கொள்வா — ✻
ரதிற்சிறிதுநறையுண்டாயின் — — ✻
சீர்கொள்வார்புன்சொல்லுஞ்செஞ்சொல்லுஞ் ✻
சேர்ந்தொன்றிற்சேராப்புன்சொல் — — ✻
யார்கொள்வாரென்பதனைச்சற்றறியாமற் — ✻
சிறியேனுவைசக்கின்றேனே. — — (௯)
புருடனுக்கேற்றிழையார்பொருளாப்ப ✻
தெனப்பிறர்தம்பொருளேவெளவுந் — ✻
திருடனுக்கேமலவருக்கறமாப்ப — — — ✻
தெனச்சிறியதெள்குதுள்ளிக் — — ✻

கருடனூர்க்குப்புறவைகற்பிப்ப - - ✻
தெனவனந்தங்கண் ணுவரார்க்குக் - - ✻
குருடனூர்வழிகாட்டலெனப்பெரியோர் - - ✻
முன்சிறியேன்கூறலுற்றேன். - (௰)

ஆக்கியோன்பெயர்முதலிய.

தண்கவிகைக்குரிசிலரிச்சந்திரன்றன் - - ✻
சரிதமதைத்தாரணியோர்விருப்பமெய்த ✻
வண்கவிஞர்வகைவகையேவகுத்துரைத்த - - ✻
வடமொழியுந்தென்மொழியின்வழுவிலாத ✻
வெண்கவியுங்கண்டரங்கின்மாதராடல் - ✻
விதங்கேட்டுமழையெனவேவெருண்டுசோலைக்
கண்கவிகள்குதிபாயுநெல்லூர்வீர - - - ✻
கவிராசனேவிருத்தக்கவிசெய்தானே. - (௰௧)

(இதுவுமது.)

விதியினாரசிழந்தவரிச்சந்திரன்றன் - - ✻
வியன்கதையாம்வெண்கவியைவிருத்தமாக்கி
அதிவிதமாங்கலியுகத்திவ்வருசகாத்த - ✻
மாயிரத்துநானூற்றுநாற்பத்தாறில் - ✻
சதுமறைதேர்புல்லாணித்திருமான்முன்னே - ✻
சக்கரதீர்த்தக்கரைமேன்மண்டபத்தில் - ✻
சதிதருசீர்நெல்லூர்வாழ்வீரனுள - - - ✻
கவிராசன்கவியரங்கேற்றினானே. (௰௨)

பாயிரமுற்றுப்பெற்றது.

நாட்டுச்சிறப்பு

மூன்றுறழியாப்பிறவிக்குருடானமூடன்
நன்றூற்றெறுசாகரத்தினிடஞ்சாருமாபோல்
என்றூலதிதக்கதன்றெனவினுமன்னர்மன்னன் *
னன்றூட்டணியான் கிலவல்லநடத்துவற்றேன்.

நட்பாற்கடலாரமுதங்கெழுமித்தழைத்து - -*
நட்பாற்புகுந்தாலெனவந்தவர்வேலைநண்ணி*
உட்பாற்புனலுண்டெழுந்தோங்கியகாளகூடம்
விட்பாற்பரந்தாலெனமேகமெழுந்ததன்றே. உ

அடியும்முடியுந்தெரியாதிருண்டண்டமெங்கு
ம், கொடியுங்குடையுமெனமாமுகிற்கூட்டமீண்
டிப், படியும் விசும்பும் பகைத்தாலெனப்பாரவி
ற்கோத், இடியுந்துளியுங்கணையாப்பெரிதெய்த
தன்றே - - - - - (௩)

மீனந்திகழ்வேலையிற்றோன்றியதென்னவின்
றோர், தானந்திகழ் * தாத்திரியைப்பெருந்தாழி
யாக்கி, வானந்தனைநெய்யரிவட்டகையாக்கிவிட்
ட, பானந்தனையொத்துவிழுந்ததுமாரிபம்பல்.

விண்ணிற்பொழியுங்கணைமாரிவிழுந்துதைத்த *
புண்ணிற்பொழியுங்குருதித்திரள்போலவெங்கு
மண்ணிற்பொலியிந்திரகோபமலிந்து தோன்று
க், கண்ணிற்கமையாப்புனல்வந்துகவித்ததன்றே

---

* தாத்திரி - பூமி.

கள்ளங்கொலைகட்புலைகாமமென்றைந்துமற்றார்க்
குள்ளந்தெளிந்தோர்தருமுத்தமதானமென்னப்
பள்ளந்திடர்மால்வரைகானகப்பக்கமெங்கும் ✻
வெள்ளம்பெருகிப்பரந்தோடிவிளைந்ததன்றே.

கருவிக்கணமாமழைபெய்துகலித்தவெள்ளம் ✻
பரவிப்பலகோடிபருப்பதக்கோடொடித்தாங் ✻
கருவித்திரள்புக்கடங்காநிரைத்தோடியார்த்துச் ✻
சரயுத்தனிலேதலைவைத்துச்சரித்ததன்றே. (௭)

ஆரங்குளவஞ்சியசோகுபலாசந்தேவ - ✻
தாரம்வகுளங்கடிச்சண்பகஞ்சாதிகன்னி - - ✻
காரஞ்சுரபுன்னைகடம்புகர்ச்சூரம்வேய்கரீ ✻
பூரம்பணையோடுபரண்டிடப்போயதன்றே. (அ)

ஏலந்தகரமிலவங்கமரித்திரந்தக் - - - ✻
கோலம் † வசவாசிசெங்குங்குமங்கோட்டம்வா
ரித்,தாவம்பதிஞறுநுடங்கிடச்சார்ந்தஆழிக் ✻
காலந்தனின்மோதுகருங்கடலொத்ததம்மா. (௯)

நீலம்வைரம்வைடூரியநித்திலஞ்செங் - ✻
கோலத்திகழுந்துகிர்கோமளம்பத்மராகம் ✻
ஞாலத்தனில்வந்ததொரிந்திரசாபமென்ன - - ✻
ஓலந்திகழாற்றிலொழுக்கெதிர்ந்தோடிற்றன்றே. ௰

(வேறு.)

ஆடுநாகமுமத்திகளும்வரை - - - ✻
யாடுநாகமுமத்திகையேபுன - - ✻
லோடுநாகமுமூற்றிடலானதி - - ✻
யோடுநாகமும்மந்தியையொத்ததே. (௧௧)

---

† வசவாசி-வசம்பு.

அம்மடங்கலுமாழ்கிளர்ந்தெழும்
அம்மடங்கலுமொப்பனைதயன்றிறின்
மும்மடங்கலும்வெல்லுமுதிர்கய
மும்மடங்கலுங்கொண்டுமுடுகித்றே. (௰௨)

முறியுமாறுற்றருவுமுதல்கெட
முறியுமாறுந்திமுற்றுநன்மாண்மதி
வெறியுமாறடியுங்கொடுவேகமும்
வெறியுமாறிலாவெங்களிறுற்றதே. (௰௩)

வாரணத்தடங்கோடும்வளைகளும்
வாரணத்தடங்கோடும்வரன்றியே
ஆரணத்துறையத்தரியுண்மகிழ்ந்
தாரணத்துறையொத்ததவ்வாறரோ. (௰௪)

துடிமருங்கிற்கொடிச்சியர்தோயவே
துடிமருங்கிற்பரப்பிச்சுழித்தராய்க்
கொடிபுனைந்தருகன்கமழுழ்ந்துழுந்
கொடிபுனைந்தகுறிஞ்சிகடந்ததே. (௰௫)

வீயும்வேங்கையுமத்தியுமேதகு
வீயும்வேங்கையுமத்தியும்வீழ்பலாக்
காயும்பாலையில்கைக்கயமுங்கொடு
காயும்பாலையில்வந்துகலந்ததே. (௰௬)

தேருமாறுணராச்சினவேடர்பெய்த்
தேருமாறுமுட்டேறரும்பாலையில்
ஊருமாதரியானையுமுந்திமான்
ஊருமாதரிதாடொழுதுற்றதே. (௰௭)

இறவங்கோங்கமிருப்பையின்பூந்துணர் - *
இறவங்கோங்கவிரிமின்மினியெனப் - - *
புறவமேய்ந்தசுரம்விட்டுப்போய்ச்செழும் - *
புறவமேய்ந்ததுபூம்புனலாறரோ - - (௰௮)

ஆடுமாசுனையாவிடையாழநீர் - - *
ஆடுமாசுனையாவிடையோடவே - - - *
கோடுகுத்திக்குலைத்ததுகொன்றையின் - *
கோடுகுத்திக்குலைத்துணர்வாரியே. - - (௰௯)

அண்டர்தோயலைவாரிமராவபூழீஇ - - *
அண்டர்தோயலைவாரியிற்சார்ந்தனி - - *
கொண்டலைத்தரிக்குங்குருந்திற்கலை - - *
கொண்டலைத்தரிக்கொத்தகுழைவருமே. - (௨௰)

உறவணங்குமராவுமுழக்கிவான் - - *
உறவணங்குமராவுமொசித்தது - - - *
மறைவணங்குமரியைவணங்கல்போல் - - *
மறைவணங்குமரியைவணங்கியே. - - (௨௧)

ஆவியன்னபெடைகளுமன்றிலும் - - - *
ஆவியன்னமுந்துன்னியநாரையும் - - *
மேவியின்பம்விடாதநெடும்புனல் - - - *
வாவிசூழுமருதம்புகுந்ததே. - - - (௨௨)

வாழைபூகமகிழ்மருதாசினி - - - - *
தாழைக்கரஞ்சம்பகஞ்சன்மலி - - - *
ஞாழன்மாதுளைநாகமலிந்ததண் - - - *
சூழல்சேரத்தொலைத்ததுதோயமே. - (௨௩)

பால்கடோறும்பரந்துசெறிந்தவத்
கால்கடோறுங்கலந்தகடும்புனல்
வால்கடோய்மகிடம்புகவாம்படச்
சேல்கள்பாயுஞ்செழுந்தடம்புக்கதே. (௨௪)

வாவிசேரநிரப்பிமதகினில்
தாவிநீள்கணைசாடியுடைத்தலை
நீவிவண்டல்கொழித்துநெடும்புனல்
பாவிநீலவயலிற்பரந்ததே. (௨௫)

வரம்புடைத்துக்கரைத்துமடுக்களின்
குரம்புடைத்துக்குமுதமுங்கஞ்சமும்
கரும்புமிஞ்சியுமஞ்சளுங்கட்டழித்
தரம்பையோங்குபடப்பையழித்ததே. (௨௬)

ஏரிசேரவுடைத்தழித்திண்கனி
வாரியோடிவளம்பயின்மள்ளர்தஞ்
சேரிசேரவழித்துச்செழும்புனல்
பேரியாறுபரந்துபெருகிற்றே. (௨௭)

நாடுதோறுமலிந்தநறும்புனல்
ஓடுமோதையுமோங்குதடங்கரை
சாடுமோதையுந்தண்டலைவண்டுகள்
பாடுமோதையுமெங்கும்பரந்தவே. (௨௮)

கள்ளலம்பியவாயுங்களிடகிழ்
உள்ளலம்பியவுள்ளமுந்தோன்றவே
புள்ளலம்பியபொய்கைக்கரையெலாம்
மள்ளர்வந்துநெருங்கிடலிற்றனர். (௨௯)

கொட்டுவாங்கிக்குழித்தறிவப்புமண் - - ※
வெட்டுவார்சமப்பார்மிதித்துக்கரை - ※
கட்டுவார்வன்கடிப்பெடுத்துக்கிணை - ※
தட்டுவார்துரகங்கொடுதாங்குவார். - (௩௰)

முழவெழும்படிமொய்ப்பிறையிற்கறங் - - ※
கெழுவெருண்டயலன்னமிரிந்திடப் - ※
பழவரம்புதுக்கிப்பகடுசேர்த் - ※
துழவரொங்குழூஉமொலியோங்குமே. - (௩௧)

வலம்புரித்திரள்வால்வளைவெண்சலஞ் - - ※
சலம்பிளப்பதரளம்பிளப்பவுற் - - ※
பலம்பிளப்பபதுமம்பிளப்பமீன் - - ※
குலம்பிளப்பகொழுச்செலுஞ்சாலெல்லாம் (௩௨)

இரும்பொடித்தனவேரடிக்கின்றகோல் - - ※
அரும்பொடிப்பொடியாகவரப்பினீள் - - ※
கரும்பொடித்துக்கடாவடித்தெங்கணும் - ※
பரம்படிப்பவர்பற்பலகோடியே. - (௩௩)

கரும்புங்காவியுங்கஞ்சமுமாம்பலும் - - ※
அரும்புஞ்செம்புமலவனுமானையும் - - ※
சுரும்புநத்துஞ்சுரிமுகமுஞ்செழும் - - ※
பரம்புதோறும்படிந்துதெரிந்தவே. - (௩௪)

சாலெல்லாந்தரளத்திரண்மள்ளர்தங் - - ※
காலெல்லாங்கமலக்கடிகார்க்கடா - - ※
மேலெல்லாம்பொழிவேழத்தின்சாறதன் - - ※
வாலெல்லாம்பலமாமலர்மன்றவே. - (௩௫)

போரடித்தவிதியவன்பொன்றுமன்
றூரடித்தவனூர்தியென்றென்னவே
ஏரடிப்பவிருசிறையுங்கொடு
†மாரடித்திரியும்மடவன்னமே. (௩௭)

நன்றுணாத்தடநாண்மலர்த்தாதூதிப்
பன்றுணாத்தபகட்டின்பதக்குளம்
பென்றுணாப்பதிடமறவெங்கணும்
பொன்றுணாத்தநிறத்தகற்போன்றவே. (௩௮)

நொக்கவேதியர்க்குந்துறவோர்கட்கும்
தக்கதானந்தருபவர்போலவே
பக்கநோக்கிப்பலிப்பறிந்தெங்கணும்
மிக்கசெந்நெலும்வெண்ணெலும்வித்தினர். (௩௯)

இறவுபாயவிருங்கதலிக்கனி
மறவுபாய்வருக்கைக்கனிமாங்கனி
பிறவும்வாய்விண்டூறிப்பொழிந்திடு
நறவுபாய்ந்திடநாறுவளர்ந்தவே. (௪௰)

செம்புதோன்றுஞ்செழுந்தடத்தின்கணாத்
தூம்புதோன்றியசோர்புனறோன்றுவ
காம்புதோன்றுவளைப்புழைக்கட்பெரும்
பாம்புதோன்றுவபோன்றனபாலெலாம். (௪௧)

இரவைவென்றவிருண்டசெழுங்குழல்
அரவைவென்றவகலல்லியல்குல்வெங்
கரவைவென்றகயற்கட்கடைசியர்
குரவைவென்றகுளாகடலார்ப்பையே. (௪௨)

---

† மார்பு மார்பவிசாலமாயிற்று

செவ்வண்ணந்திகழ்சிறடிமென்முகங்
கைவ்வண்ணஞ்செழுந்தாமரைகாவியின்
அவ்வண்ணம்விழிவாயரக்காம்பன்மற்
றெவ்வண்ணங்களைகொய்குவரோழைமார். (௪௨)

கயலின்மென்கணைமாய்க்குங்கடைசியர்
சயநெடுங்கண்சலிலத்திற்றோன்றலால்
மயல்விளைந்துமயங்கிமள்ளர்தாம்
கயல்களென்றயலிற்பறிகட்டினார். (௪௩)

சேலிரும்புனற்கேள்வனைச்சேர்ந்தபின்
சூலிருந்துவண்டலைந்தீன்றுமெய்ப்
பாலிருந்துபசந்துபழுத்தசெஞ்
சாலிகற்பினர்போற்றலைசாய்த்தவே. (௪௪)

தோட்டுவார்நறைசூழ்வயல்சேர்வுறீஇப்
பூட்டுவார்கதிர்ப்புள்ளரங்கல்சூற்சங்கில்
ஓட்டுவார்மலர்ச்செந்திருகாணமுன்
நீட்டுவாரொணநெல்லரிவார்களே. (௪௫)

சேற்றுவார்கதிர்சேரக்கொணர்ந்துவைத்
தாற்றுவார்களத்தாற்றினடைந்துபோர்
ஏற்றுவார்பகட்டேற்றிமிதித்தநெல்
தூற்றுவார்குவிப்பார்சுமப்பார்களே. (௪௬)

பகடுமட்டறப்பூட்டிப்படுத்தநெல்
சகடுமூட்டவிட்டூர்ந்துதத்தங்குல
மகடுமக்களும்வைகுறுவாழ்மனை
முகடுமுட்டநிறைப்பரென்முற்றுமே. (௪௭)

நாடுதோறுமிவ்வாறு நடப்பன - - - - *
காடுதோறுங் களிமயிலாடுவ - - - - *
வீடுதோறுந் திருவிளையாடுவ - - - - *
கூடுதோறுங் கருங்குயில்கூவுமே. - (௪அ)

பெடைகிடப்பவும் பிள்ளைகிடப்பவும் - - *
இடைகிடப்ப விளவனச்சேவல்கள் - - - *
மடைகிடக்கும் வளைமுத்தையண்டமென் - *
றடைகிடப்பன வன்னப்பெடைகளே. - (௪௯)

சாயெலாம்பருவச்செழுஞ்சாலியின் - *
காயெலாந்தின்றுகன்னற்படப்பையுள் - *
மேயலாவிளமேதிகளின்கடை - - - *
வாயெலாமுத்துமாலைகளாகுமே. - - (௫௰)

மட்டிலாமடவார்குடைவாவிவிட் - - *
டெட்டியன்னமிரிந்துபறக்கவாய் - *
விட்டிரங்கிடுயார்ப்பினைமென்மலர்த் - - *
தொட்டிலாட்டித்திரைகடியிற்றுமால். - (௫௧)

பள்ளமேற்பனசக்கனிநூறலவ் - - *
வெள்ளமேற்கமலத்தலர்மேல்விழ - - *
உள்ளமேற்கமுறுண்டவவாவிருவ் - *
வள்ளமேற்பனபோல்வனவாவியே. - (௫௨)

பூகத்தின்செழும்பாளையைப்புன்கவி - *
நாகத்தின்படமென்றுநடுங்கியே - - *
பாகத்திற்றின்றுவிட்டபலாக்கனி - - *
மேகத்திற்புதைவெங்கதிரொக்குமே. - (௫௩)

சேறுபாய்மலர்த்தேனொடுதீங்கனி - *
ஊறுபாய்வவுமொண்கரும்பட்டநீர் *
நாறுபாய்வவுந்தத்தமிற்கூடியே - *
ஆறுபாய்வனவங்கங்கனந்தமே. - (௫௪)

மன்றறங்குமலர்களின்மேய்ந்திளந் - - *
தென்றல்வந்தவண்சிந்தியதாதுகள் - - *
குன்றின்வீழ்பொன்மழைக்குழுவென்னவே *
முன்றிலும்மணிமாடமுமொய்க்குமே (௫௫)

உகலரும்புனத்திற்கிளியோச்சுவார் - - *
அகல்கவண்கொண்டெறியுமாமணி - - *
பகல்விழுங்கனமொய்ப்பனபோலாம் - *
குகனிருந்தசெழுந்தண்குறிஞ்சியே. - (௫௬)

நெடியநெய்தலினித்திலவண்டலில் - *
கொடியகாதலிற்கூடலிழைத்திடும் - - *
கடியநீலக்கருங்கணுழைச்சியர் - *
மடியிலேறிவளைகண்முத்தீனுமே. - (௫௭)

கலையரக்குங்கருங்கணுழைச்சியர் - - *
புலையரக்குநறைக்கும்பொருந்தியே - - *
விலையரப்பனவெண்முத்தமேயற - - *
நிலையரக்கும்பரதவர்நெய்தலே. - (௫௮)

திலம்விளக்கிடுநித்திலநீலவுந் - - - *
பலம்விளக்கிடும்பைம்புனல்பண்பினன் - *
னலம்விளக்கிடுநல்லவர்வாய்மொழி - *
குலம்விளக்கிடுங்கோசலநாடரோ. - (௫௯)

நாட்டுச்சிறப்புமுற்றிற்று. ஆ-௭௰௧.

நகரச்சிறப்பு

மகரதோரணவாயிலுநாஞ்சிலும்
சிகரமாமதிலுஞ்செறிபோகம்
சகரர்வான்புகழ்சாற்றுமயோத்திமா
நகரமேன்மைசிறிதுநடத்துவாம். (௧)

மாடமாளிகையும்மடப்பள்ளியும்
கூடகோபுரமும்பெருங்கோயிலும்
ஆடரங்குமணியறச்சாலையும்
பாடலங்கரிவையியபந்தியும். (௨)

மாரனன்னவர்மாமயிலன்னவர்
தாரடர்ந்தபுயமுந்தனங்களும்
நேரடர்ந்துநெருக்கலின்வீழ்ந்தபொன்
ஞாயின்றுவவாவணவீதியே. (௩)

அன்புதங்குமனத்தரிச்சந்திரன்
றன்புகழ்கொழுந்தோங்கித்தழைத்தல்போல்
பொன்புனைமுலையார்புலர்த்தும்மகி
லின்புகைசென்றெழுமுகடெங்குமே. (௪)

சோனையார்ப்பெனவாழிதொடர்ந்தெனச்
சேனையார்ப்பனதேரொலியார்ப்பன
வானையாத்துறும்வாம்பரியார்ப்பன
ஆனையார்ப்பனவாவணவீதியே. (௫)

வேதவோசைதவிரன்கலையோசையின்
தேவோசைகிளையோசையாடுவார்
பாதவோசைபரிபுரத்தோசையாம்
நாதவோசைநடப்பனநாளுமே. (௬)

கிள்ளையாடுவகீதங்கள்சாரிகைப்
பிள்ளையாடுவவேதம்பிராமணர்
கொள்ளையாடுவரின்னிசைக்கோதையர்
வள்ளையாடுவர்மன்னவன்வண்மையே. (௭)

கூடலோங்குவகோதையர்யாவர்க்கும்
ஊடலோங்குவதவ்வையொருத்திக்கும்
ஆடலோங்குவகண்ணுளர்க்கன்றாம்
பாடலோங்குவநித்தலும்பாணர்க்கே. (௮)

பொற்பராககர்ப்பூரபராகச்செம்
பற்பராகபயோதரவேசையர்
விற்பராகமிராவிடியன்முதல்
கற்பராகமநாடககானமே. (௯)

எம்மினெண்ணியிருந்தனயாவையும்
வம்மினென்னவழைப்பதுமானவே
விம்மிநின்றவியன்கொடியெங்ஙனும்
தம்மினின்றுநுடங்கித்தழங்குமே. (௰)

முன்னைமாதவத்தான்முழுதுக்குநல்
லன்னையாமரிச்சந்திரன்றன்னைமா
லென்னமேல்வளர்ந்தீண்டியபார்கட
றன்னையொத்தநவரக்கொடிகளே. (௰௧)

திருகநோக்கியற்சித்திரப்பாவையை
அருகநோக்கியவன்பனாவல்லியர்
உருகநோக்கியஆடவர்க்குயிர்
பருகநோக்குஞ்சமனைப்பழிக்குமே. (௧௨)

பூரணெனிங்குவிசத்தவன்பூண்டபோர்க்
காரணமக்கரிச்சந்திரனுமெனச்
சாரணைடைந்ததடவரையிட்டம்போல்
நீரணெடும்பரித்தேரணிநிற்குமே. (௧௩)

ஏமசாலையுமின்னிசைச்சாலையும்
ஓமசாலையுடனறச்சாலையும்
தூமசாலையுந்தோகையர்மாதவக்
காமசாலையுமேகணக்கில்லவே. (௧௪)

அறமிருக்குமனத்திலனைவர்க்கும்
திறமிருக்கும்புயத்திற்செழுஞ்சுடர்
நிறமிருக்கும்படையின்கணிக்கமின்
மறமிருக்குமடந்தையர்கண்ணினே. (௧௫)

தொட்டுமன்னன்சுடர்முடிசூடிய
மட்டுமேக்கமவ்வாணகர்க்கில்லையூண்
அட்டுண்பாரன்றியாதுலரின்மையால்
இட்டுணக்குறையென்பதொரோக்கமே. (௧௬)

கற்றிடுங்கொலைக்கண்கண்டுகாமுகர்
முற்றிடும்பையுமோட்டிளங்கொங்கையால்
இற்றிடுமருங்கென்னுமிடும்பையும்
மற்றிடும்பையம்மண்டலத்தில்லையால். (௧௭)

இபமருப்பெனக்கொங்கைசுமந்திடை - ✻
தபமுரிந்திடுந்தக்கதன்றீதென - - - ✻
உபயபாதத்திற்கொண்பொற்சிலம்பிடும் - ✻
அபயமன்றியபயமற்றில்லையே. - (௰௮)

நிறையுந்தாமரைநீடத்திற்புனற் - ✻
சிறையுமன்றிச்சிறைபிறிதில்லையால் - ✻
பிறையுமென்முலைப்பேதையர்சிற்றிடைக் ✻
குறையுமன்றிக்குறைபிறிதில்லையே. - (௰௯)

பொருந்திமானும்புலியும்புனலுடன் - ✻
அருந்திவாழுமொருதுறையன்றிறல் - ✻
பருந்துபைங்கிளியும்பொருபஞ்சரத் - ✻
திருந்துவாழுமிரவும்பகலுமே. - (௨௰)

பொருளும்வேதபுராணமும்புந்தியில் - ✻
தெருளுந்தானதியாகமும்யாகமும் - ✻
மருளின்மாதவமும்வளமுமுயிர்க் - ✻
கருளுந்தோன்றுமந்நகரத்தினே. - (௨௧)

(வேறு.)

அத்திருநகர்க்குணிலையாயிரமணித்தூண் ✻
பத்திகளுமத்தொகையபைம்பொனுறுகோயிற்
சித்திரமணித்தவிசின்முத்தணிசெழும்பொற் ✻
சத்திரநிழற்றவரிச்சந்திரனிருந்தான். - (௨௨)

என்னதிஃதென்னதிஃதென்றிருகைகூப்பி ✻
மன்னவரிடுந்திறைகள்வந்துனிதளப்பத் - ✻
துன்னுமறையோர்கள்பலர்சோதிடமுரைப்ப ✻
மன்னுகவிவாணர்பலர்மங்கலமியம்ப. - (௨௩)

முந்தையிரவிக்குலமுதற்றலைமையோரும் *
வந்தகுலமந்திரிகண்மண்டலிகர்சூழச் - *
சந்திரமுகத்தமணியக்கனைதனைத்தூக் - *
கந்தரமடந்தையர்சுமந்திடவளிமாற. (௨௪)

ஆடகமணிக்கடகைகைத்தலமமர்ந்த - *
மாடகமுறுக்குபுமடந்தையர்கள்பாடப் *
பாடகபதப்பரிபுரத்தொலியெழும்ப - *
நாடகமடந்தையரசைந்துநடமாட. - (௨௫)

ஆகமிசைதங்குமணியாரமமவற்றின் - *
பாகமிசைசோதிவிரிபன்மணியுமின்னக் - *
கோரகனகமங்கையொடுகொற்றவையுமம்பொ *
வாகுவலயங்களுமணிப்புயமிலங்க. (௨௬) [ன்

சோமனைமுடித்தருளுமாபதிசடாத - *
காமனிவனென்னவொளிர்கட்டழகிலங்க - *
மாமகரகுண்டலமணித்திருவில்வீசச் - *
சேமவுடைவாளதுதிருக்கையிலிலங்க. (௨௭)

துடிப்பகரத்தனடியர்த்தொழுதேற்றப் - *
பொடிப்படவபிப்படுகறுப்புறதல்பொங்க *
முடித்தலையுறத்திசைமுகத்தரசருய்த்த - *
வடிப்படுகறுப்பிருமலர்க்கழல்விளங்க. (௨௮)

காலமறுகண்டிகைதிருஞ்சரியுமொத்தெண் - *
பாலனவுநீள்கதிர்பரப்புவனபோலக் - *
கோலமுகநின்றொளிகுலாவவதன்மீதே - *
சாலமணிமேவுமுடிநின்றொளிதயங்க. (௨௯)

கன்னகநிறைந்திமைகடந்துகடைதாவி - *
மன்னகமடங்கலுமடைந்துயிர்கள்வாழ *
விண்ணரவுதாவியிருவெங்கலிகரப்பத் - *
தண்ணளிநெடுங்கடலிடங்கொடுதழைப்ப (௩௰.)

வந்தெறியபோதநதியின்மண்டுதிரைவானிற் - *
சிந்துநுரையூடுதிகழ்செங்கதிர்கடுப்பச் - *
சந்தமுலைமாதர்பிடிசாமரையினூடு - - *
சுந்தரமணிப்பணிதுலங்கிடவிருந்தான். (௩௧)

நகரச்சிறப்புமுற்றிற்று. ஆக௱உ

முதலாவது

விவாககாண்டம்.

இருந்தகாலையிலியாவர்க்கும்விடைகொடுத்த
ருளித்,திருந்துமாமுடிமன்னவன்சிலருடனிருப்
பப், பொருந்துநன்னெறிப்புண்ணியதீர்த்தங்க
ளாடி, அருந்தவத்தின ரனேகர்வந்தநகரடைந்
தார். - - - - (௧)

சடையுமுண்டமுஞ்சிகையுநண்டாதுகற்றே
யந்த, உடையுமாமரவுரிகளுமுடித்தழகிருந்த,
இடையுந்தாழ்ந்திருபண்டியுமெய்த்திளைத்தேய்
ந்த,நடையும்வாழ்த்தலுஞ்சபித்தலுமுற்றுறநா
வும். - - - - - (௨)

நாலுமார்பமுநூலிடைத்திகழ்ந்தறநடங்கு
ந்,தோலுமங்குலித்தருப்பையுந் துலங்குமொ
ண்செவியில்.நாலும்யாககுண்டலங்களு நான்ம
றைநெறிமுக்,கோலுமேந்தியகுடைகளுங் குண்
டிகைக்கரமும். - - - - (௩)

இன்னகொண்டுளவிருடிகளியாவருமெய்தி - *
அன்னசத்திரமணைந்துபுக்கனரயர்வுயிர்த்து *
முன்னம்வாரிதியார்ப்பெடுத்தாலெனமுழங்கி *
மன்னர்மன்னவன்மாளிகைவாயிலில்வந்தார்.(௪)

வந்தமாதவரோதையும்மன்னவன்கேட்டுச் - *
சிந்தையிற்பெருமகிழ்வரச்சென்றெதிர்கொண்
எந்தமாதவமின்றுவந்தெய்தியதென்று - [டே
அந்தமாதவரடிமலர்முடியுறத்தொழுதான்.(௫)

தொழுதகாலையிலாசிகளருந்தவர்சொல்லி - *
முழுதுமாமறைமுழங்கிடமண்டபமுற்ற - *
எழுதுமாமணியாதனமவ்வவர்க்கீந்து - *
பழுதிலாமொழிமன்னவனிருந்திவையகர்வான்.

எந்தத்தேயங்கள்கண்டனிரொத்திசைபுகுந்தீர் *
எந்தத்தீர்த்தங்களாடினீர்புதுமையென்கண்டீர்
முந்தக்கூறுமினென்றரிச்சந்திரன்மொழிய - *
அந்தக்காலையிலரசனுக்கருந்தவருரைப்பார்.(எ)

அங்கண்மாநிலத்தரியகன்னோசிநாட்டகத்துப் *
பொங்குகண்டகியென்பதோர்புண்ணியதீர்த்த
அங்கியாம்புகுந்தாடினின்னருண்முகங்காண [ம்
இங்குவந்தனமின்னமுங்கேட்டியென்றிசைப்பார்.

அந்தநாட்டினிற்கன்னமாபுரிநகராள்வோன் *
சந்திரன்வழிச்சந்திரதயன்றவம்புரிந்து - *
கந்தவார்சடைக்கடவுடன்வரத்தினாற்பயந்த - *
தந்தமாமுலைத்தையல்சந்திரமதியென்பாள்.(௯)

மண்மடந்தையர்தம்முளும்வாசவனுறையும் - *
விண்மடந்தையர்தம்முளுநிகரிலாவிறல்வேற் *
கண்மடந்தைதன்கருங்குழலருந்ததிக்கற்பிற் *
பெண்மடக்குகற்புடையளிந்நிலாயினுமெழிலா
[ள். (௰)

(வேறு.)

ழகிலைவென் றறலைக்கடந் தசைவலத்தை
முனிந்துபொற்கமுக்கையைமுடிக்கி
அகினறும்புகையுந்தகரமும்புழுகு
மணைஇட்பணிநீரிலேநனைந்து
பகலவற்றுடைந்தவசையிருள்வெள்கிப்
பலமலர்த்தாரணிந்தவேறு
டிகல்செயக்கருதியிருடாண்டாலித்
தெழுந்தனசெழுந்தடங்குழலாள். (௰௧)

பயிர்கடந்தனவும்பட்டமாமரமும்
பண்டைநாறுக்கவெள்ளென்பும்
உயிர்பெறற்பொருட்டிப்பளிதமும்பாலு
மொழுகியதேனுமாரமுந்தும்
குயிலினிற்குரலுங்கிளியினின்மொழியுங்
குழலும்யாழுங்குழைத்திழைத்து
மயிலியற்சாயல்வாணுதறனக்கு
மலரயன்வகுத்ததென்மொழியாள். (௰௨)

கடவினைக்கயலைக்கணையைமென்பிணையைக்
காவியைக்கருவிளமலரை
வடுவினைக்கொடியமறலியைவலையை
வாளைவென்றறவுநீண்டகன்று
கொடுவினைக்குடிகொண்டிருபுறந்தாவிக்
குமிழையுங்குழையையுஞ்சீறி
விடமெனக்கறுப்புற்றரிபரந்துன்னை
வேலினுங்கூரியவிழியாள். (௰௩)

இருப்பைவிட்டுயரார்நெடிது நாட்டவுஞ்செய்
திருகையுஞ்சிந்தையும்வருந்திச் - ※
செருப்†பையின்றிறந்தமதனனைச்சுட்டத், ※
திருமுடிவேண்டுமென்றியானை - ※
மருப்பையுங்கும்பத்தலத்தையுஞ்சக்ர - ※
வாகத்தையும்வடகனகும் - - ※
பொருப்பையும்படைத்துத்தெளிந்தபின்படை
த்த, புளகிதபூரணமுலையாள்; - (௰௪)

அறந்திகழ்தவமுமகிலமுமிதனு - ※
லறியுமென்றயன்படைத்துலகே - ※
சிறந்தவேல்விழியைமுன்படைத்தயர்ந்து ※
செங்கரஞ்சோர்ந்ததோதிகைத்து - ※
மறந்ததோகரந்துவைத்ததோகளப - ※
வனமுலைப்பொறைசுமந்துருகி - ※
இறந்ததோவுரைதோவில்லையோவினிமே - ※
லெய்துமோவறியொணாதிடையே. (௰௫)

செருக்குமோகனைச்செந்திருமகளுறையுஞ் ※
சேயிதழ்த்தாமரைமலரும் - - ※
பெருக்குமாமறைநூலுணர்த்தநான்முகத்தோன்
பிறந்தசெங்கமலமும்வெள்க - ※
முருக்குமாம்பலுமென்காவியுங்குமிழு - ※
முல்லையும்வள்ளையுமலர்ந்து - - ※
திருக்கிளர்கமலமிதுவெனச்செவ்வி - ※
திகழ்வெயர்செறிதிருமுகத்தாள். - (௰௭)

---

† பயினையென்பதுபையினெனப்போலியாயது.

குடிகமழ்மலருங்கலவையுமழகுங் - *
 கதிர்மணிப்பணிகளுஞ்சுமந்து - *
கொடியெனவிசைந்துநிறைவுறப்பூத்த - *
 கொம்பெனவசைந்தசைந்தொல்கி - *
அடியிணைபடியிற்படப்பொருந்தி - *
 யன்புறுகடகரிப்பின்போம் - - *
பிடியெனக்கன்னிநடைபயிலன்னப் - *
 பெடையெனமடநடைபெயர்வாள். (௰௭)

அன்னதன்மையளாயமிர்தினிற்பிறந்த - *
 வணங்கபிடேகத்தையனந்த - *
மன்னர்தந்தமக்குமணஞ்செயக்கருதி - *
 மணமொழிந்தவர்க்கெலாங்கொடாது - *
முன்னமெம்பெருமான்மொழிந்தவற்கன்றி *
 முடிக்கிலேன்கடிமணமென்னச் - *
சொன்னதோர்மொழியுங்கேட்டனமவணின் *
 கேளுள்களுக்கிசைந்தவளென்றார். - (௰௮)

பாதகமென்னுக்கடந்தகாமத்தீ - *
 பங்கமுற்றுறைவிடம்பெருது - *
மாதவருளாத்தமொழிவழிவந்து - *
 மன்னவன்செவிவழிபுகுந்தாங் - - *
கூதைவந்தலைக்கும்வெளிவிளக்கதனி - *
 னுளமலைவுறவலைத்தோங்கிக் - - *
காதலங்கொழுந்துவளர்ந்திடவுருகிக் - *
 கனலினிலிடுமெழுகானான். - (௰௯)

சந்திரகலையானெக்குநீர்பொழிவ - - *
சந்திரகாந்தமேயல்லால் - - *
† அந்தரசாதிச்சிலையினுண்டாகா - *
தவனிவன்மனைவியென்றயனார் - *
முந்தவேவிதித்தவிதியினலடங்கா - *
மோகமுந்தாகமுமிகுந்து - - *
புந்திகெட்டறிவுநிறைபொறைதேற்றம் - *
போக்கினன்யாக்கையுந்தளர்ந்தான். (உ௰)

(வேறு.)

களையழிகாதலாற்றையறிவெனுங்கரைசெய்தா ற்றி, வரையனபுயத்துமன்னன்முனிவரைநோக்கி மாதர்க், கரசியையடியனேனுக்கணிமணம்புண ர்க்குநும்வா, யுரையுளதாயினென்மாட்டுயிருள தாகுமென்றான். - - - (உக)

அங்கண்மாஞாலங்காக்குமரசனேயரசரேறே, திங்கண்மாமுகத்துவாமத்திருவைநீ வதுவைகூட் ட, எங்ஙனாற்செய்யுமாறே தியம்பென முனிவர் கூறச், செங்கண்மாலனையான் செவ்வாய்செங்கை யாற்புதைத்துச்செப்பும். - - (உஉ)

அல்லியங்குழலாடன்னையருமணமடியென்கூ ட்டக், கல்வியற்சுரமுங்காடுங்கடந்துகால்வருந்த நீர்போய், வல்லியைப்பயந்தோர்க்கண்டு மண மொழிந்தந்தவேந்தன், சொல்லியநெறிகேட்டெ ன்பால் வருகவென்றினிதுசொன்னான். (உ௩)

---

† அந்தரச்சாதிச்சிலை-வேறுசாதிகல்

காதலான்மன்னன் கூறமாதவர்கருணை வெள்ளமிஞ்
மீதெலாமெழுந்து பொங்கவேந்தேகண்மீண்டி
யாங்கள், போதலுஞ் செய்வோமங்கள் புதுமண
மிங்காண்பேமாயின், ஈதலா லுறுதிவேறென் றில்
லையென்றெழுந்திருந்தார். - - (உச)

சந்திரமதிதன் பாரதனங்களுஞ் சைலதாமு,கந்
தரமாரிபின் மூழ்கச்சூட்டிவேமென்னவாழ்த்தி,
மந்திரமுனிவரெல்லா மண்டபமகன் றுநீங்கி, இந்
திரபுரியையன்னவெழினகர்கடந்துபோனார்.

மாதவர்போன பின்னர்மண்டப நீங்கிமன்னன்,
ஆதலர்போலப்பள்ளி யறைபுகுந்தமளி தன்னி
மீதெலாமணங்கவாளிகுளித்திட வெளியிற்புக்குக்
காதலங்கடலுட்டாழ்ந்தான்களாறிலைகண்டிலா
தான் - - - - (உரு)

மயங்கினான்வருந்தினான்மெய்வாடினான்மதனை
னம்பால், தியங்கினான்வளர்ந்தகாமத்தீயினாற்செ
யலற்றுவி, தயங்கினான் றீராமோக தாகத்தாற்ற
ளர்ந்தும்மேமேல், உயங்கினா னுருகிமெய்சோ
ர்ந்துளைந்தெதாடு மூழைப்பானான். (உஎ)

இந்தமால்களிற்றியானைச்சந்திரநயன்றன்பா
லை,வந்தமாமுனிவரோடும்வந்திவண்மாயமாகி,
எந்தமாருயிரைவெளவி யெம்முரம்புகுந்துலை
க்கொண், டந்தமாமுனிவரோடுமகன்றனந்தாவறி
கிலேமால். - - - (உஅ)

ஒற்றையாழியந்தேர்சூழிவ்வுலகம்யான்காவல் பூண்ட, அற்றைநான்முதலாக்கள்ளமின்றியேய மர்ந்ததந்தோ; பிற்றைநாள் வலியினுமேலோர்பெ ண்கொடியெந்தமாவி, இற்றைநாள்கரந்துகொ ண்டேதனதுடைமையெமக்குமன்றே. — (உ௯)

தனக்குறுந்தீமர்க்குறுநான் றனைக்கரந்தரிதி ற்கொள்ளும், உனக்குறும் பற்குவாலைக்குறுவ னேருமையிலேமானே, எனக்குறு மென்று காத்த வென்னை விட்டுன்பால்வந்தால், உனக்குறுமென் னேநீயென் னுள்ளத்தைக் கொண்டாயென்றான்.

மைதிகழ் வாரிசூழுமாநிலத்தோர்கட்கெல்லா ம், மெய்தவம்பழிபிறங்காப் பிள்ளையைப் பெ றுதலென்பார், செய்தவமன்றுதாதை சனனங்க டோறுஞ்செய்த, கைதவமாவிகொள்ளுங்களவி னிற்பயந்ததெல்லாம். — — — (௩௧)

மாறுகொண் டென்னைவல்லி வாட்டிய வாட் டுஞ்சொல்லி, ஆறுதற் கென்பானன்னி யனையு மோவணைகிலாமல், வேறுமிப்படியேயாதைவி ளைக்குமோவிளைக்கும்வாதை, ஏறுமோகுறையு மோவென் றிருந்தனனிறைவனிப்பால். (௩௨)

மானவன்வருத்தைவருட்டமணமொழிவதற்குந ண்ணிப், போனமாமுனிவர்புகழ்ப்பொழிலுடன் பொய்கைநீங்கிக், கானமுமலையுமாறுங்கடந்து கன்றேகியென்னும், மானகரணுகிக்கொற்றம தியஞ்சனபதிற்புக்கார் — — (௩௩)

மேருவை வெளிசெய்தன்ன மேனிலை மணிமாடத்து, வாரிதியெழுந்ததென்ன வந்தவன் றனைப்போற்றத், தேரும்யானையுமிழிந் துதிறையிடு மரசர்நிற்கக், காருநீள்கடலும்போலக் கதிர்மணி முரசமார்ப்ப. - - - (௩௪)

வெயில்விரிமகுடம்பொங்க விடுசுடர்க்கழல் விளங்கக், கையில்விரிகடகமின்னக் கதிர்மணிக் குழைகடாழப், பயின்மணி மரகதத்தார்பசுங்கதிர்பரப்புமாடச், சயிலசாரங்கடோறும்வலயத் தின்கிரணந்தாக்க. - - (௩௫)

சிகரமாமுலையார்செம்பொற்செழுமணிக் கவரிவீசப், புகரறவமைச்சர்போற்றப்புரிதவமுனிவர்வாழ்த்தப், பகர்தருமறையோர்சூழப்பாவலர் கவிகள்பாட, மகரதோரணக்கீழ் மன்னன் மடங்கலாதனத்திருந்தான். - - - (௩௬)

அந்தவோலக்கந்தன்னி லருந்தவமுனிவரெல்லாம், வந்தனர்வந்தபோது மன்னவனெழுந்திருந்து, சுந்தரமகுடந்தாழத்தொழுதனனவனைவாழ்த்திச், சிந்தையின்மகிழ்ச்சிபொங்க விருந்தவின்செப்பலுற்றான். - - - (௩௭)

வானநீர்பொழிந்துமுத்தமணிகொழித்தருவிபாய்ந்த, கானநீர்பெருகுதெய்வக்கண்டகியென்னுந்தீர்த்தத், தானநீராடியென்றன் றலைக்கடிமுடிகள்சூட்டிப், போனநீருடனே மீண்ட வருத்தியென்புகலுமென்றான். - - (௩௮)

மன்னகேள்சென்றயோத்திமாநகர்புகுந்தியாங்கள், அந்நகர்க்கரசனினியருளரிச்சந்த்ரனென்பான், நின்னகர்வரவுநின்றனெறியுநின் மகடனென்றும், சொன்னபினின்பாலெய்துமுவகையேதுணிந்துநின்றான். - - - (௩௯)

அறநெறியிக்கோர்தம்பாலருந்ததிக் கற்பினுளோய், புறநெறி போகா வண்ணம் வருந்தியும்பொருந்தச்செய்தல், மறநெறியன்றமாயாமன்தவந்தன்னின்மிக்க, திறநெறியதனைனின்பாற்சேர்ந்தனன்செல்வவென்றார். - - (௪௰)

புவனமுள்ளளவும்யாங்கள்புக்கறிந்தனேககோடி, நவநரபதிகடம்மைக் கண்டன நறுந்தார்வேந்தே, இவனல்கநீபயந்திருமகடனக்குக் கேள்வன், அவனலதில்லையென்னவருந்தவரெடுத்துரைத்தார். - - - - - (௪௧)

மையலாற்றிய குணத்துமாதவருரைப்பக்கேட்டுப், பொய்யிலாமொழியானுள்ளம்பொருந்தியும்பொருந்தானாகித், தையலாள்பங்கன்மேனாள்சாற்றியதகைமைக்கேது, செய்யலாநம்மாலென்னைத்திகைத்திருந்துரைக்கலுற்றான். (௪௨)

மூவராயவரின்மூன்றுமூர்த்தியாரருளிச்செய்து, தேவராகியமொன்றுண்டாலன்னதுதெரியவல்லார், யாவராயினும்யான்பெற்றவிளங்கொடிதனக்குக்கேள்வர், ஆவராலவனிங்கெய்தினறியலாமழையுமென்றான். - - (௪௩)

அரசையிங்ஙனுய்யுமன்னவனகமகிழ்ந்துவகை கூர்ந்து, விரைவுடனெழுந்திருந்துவேதமாமுனிவர்போனார், இருநிலத்தரசர்க்கெல்லாஞ் *சுயம்வரமேழு நாளென், றுரைசெயு மென்று தூதுமோலையும்போகவிட்டான். - (௬௪)

தொழுங்கழன்மன்னர்மன்னன் றூதர்சென்றுரைத்தபோதே, அழுங்கியவாசையோடுமளவிலாவுவகையோடும், செழுங்குடை மன்னரெல்லாந் தேசமுநகருநீங்கி, எழுங்கடல் வளைந்ததென்ன வீண்டிவந்தடைந்தாரன்றே. - - (௬௫)

சோலைகடோறுநன்னீர்ச்சுனைகடோறுந்தேவ, ராலயந்தோறுமாதரங்குகடோறுமாடமாலைகடோறுஞ்சீர்சான்மன்றில்கடோறுமோம, சாலைகடோறுமன்னர்தானைவந்திறுத்ததன்றே.

மானைவென்றடருங்கண்ணாண்மணமகன்வருமுன்வந்து, ஏனையவேந்தர்க்கெல்லா மிமையவர்க்கரியவொண்ணா, யானையுந் தேருமாவுமாதருமைச்சர்தாமும், சேனையுமளவிட்டார்க்குஞ்செப்பலாந்தகைமைத்தன்றே. - - (௬௭)

இந்நகர்முழுதுமன்னரீண்டியபின்னயோத்தி நன்னகர்தன்னிற்புக்கார்நற்றவமுனிவனெல்லாம் மன்னவனெழுந்திருந்துவணங்கிவாய் புதைத்து நீங்கள், சொன்னதுங்கேட்டவாறுஞ் சொல்லுமென்றெடுத்துரைத்தான். - - (௬௮)

---

*சுயம்வரம் - கன்னிகை ஒருவனைத்தலைவனாகத்தானேவரித்தல்.

அருந்தவ முனிவரெல்லாமரசனை நோக்கியை
ய, பெருந்தவமுடையார்கண் ணினியலாற்பிறரி
லுண்டோ, திருந்திழைதனையுனக்கே திருமணமு
டிக்கத்தாதை, பொருந்தினன்வல்லை நீயு மெம்மு
டன்போதுகென்றார் - - (௪௯)

என்றினி துரைத்தலோடுமெழுந்த பேருவகை
வெள்ளம், நின்றினிதோங்கவாகுவலயங்கணிமி
ர்ந்துநீங்கக், குன்றினுமுயர்ந்த செம்பொற்கோ
யில்விட்டெழுந்து போந்து, முன்றிலின்வந்து
மன்னவனினையன மொழியலுற்றான். - (௫௰)

கன்னலங்கழனிவேலிக்கன்னோசி நோக்கியிவ்
ஊர், மன்னருமமைச்சர்தாமுஞ் சேனையுமாதரா
ரும், முன்னமோர் செல்கவென்றுமொழிந்துசூத
னைக்கண்சாத்தி, வன்னமாமணித்தேர்கொண்டிவ
ருகெனவருளிச்செய்தான். - - (௫௧)

(வேறு.)

மாதங்கமடங்கல்வயப்பரிமா - - ✻
பூதம்பலதேரொடுபூணநிறீஇச் - - ✻
சூதன்கொடுவந்துசுடர்க்கழலோன் - - ✻
பாதங்களின்மீதுபணிந்தனனே. - (௫௨)

வாரேறுசெழுந்தடமாமுரசம் - - ✻
நீரேறியசங்கமுநின்றதிரத் - - ✻
தாரேறுபயங்கடுதும்பநெடுந் - - ✻
தேரேறிவிரைந்துசெலுத்தினனே. - (௫௩)

நற்றேரினைமன்னனடத்திடவே - - *
சுற்றேறநிரைத்துயரான்றினவால் - - *
குற்றேறவல்செயும்பலகொற்றவர்தம் - *
பொற்றேர்சதகோடிபொருப்பெனவே. (௫௪)

கவிகைப்படநீழல்கவிப்பமணிச் - - *
சிவிகைத்திரளின்மிசைசென்றனரால் - *
புவிகைக்கொளமைச்சர்புகழ்ந்தரசைக் - *
குவிகைத்தலமிட்டொருகோடியரோ. (௫௫)

அன்னக்குவிமாமுலைவல்லியரும் - *
கன்னற்சிலைவேளனகாளையரும் - - *
அன்னத்திரளோடரியின்றிரள்வந் - - *
தென்னக்கடிதெய்தினரெங்கணுமே. (௫௬)

சிறையோதிமமேல்வருதேவனெனப் - - *
பொறையோடொளிர்வெண்சிவிகைப்பொலி
றிறையோரொடமைச்சரிறைஞ்சிடமா - [வுற்
மறையோதிவசிட்டனும்வந்தனனே. - (௫௭)

துளைசேர்கடலொத்தனதானைகடற் - *
றிரைபோலநடந்தனதிண்பரிமா - - *
விளைசேரருவித்திரள்வீழ்பலமால் - *
வளைபோலநடந்தனவாரணமே. - - (௫௮)

கல்லார்நெறிசெல்வதுகால்கள்பொரு - - *
றெல்லாநரவாகனமேறுமெனச் - *
சொல்லாமுனமேதுறவோர்விளைவிற் - *
†செல்லாநெறியேறினர்சென்றனரால். (௫௯)

† செல்லாநெறி - ஆகாசமார்க்கம்.

பலவெண்குடையும்பவளக்குடையும் - - ❋
குலவும்பல செம்மணியின்குடையும் - ❋
உலவுங்கதிருஞ்சதகோடியுலா - - ❋
நிலவும்மென வெங்குநிறைந்தனவால். - (௬௰)

ஆதித்தனருங்குலமன்னவர்தந் - - - ❋
நீதிப்புகழெங்குநிறைந்தெனச் - - ❋
சோதிக்கவரித்தொகையுங்கொடியும் - ❋
வீதித்தலைதோறுமிடைந்தனவால். - (௬௧)

காற்றேறுநிகர்த்தகடும்பரிவா - - ❋
ளேற்றேறுநிகர்த்தனயானைவளைக் - ❋
கூற்றேறுநிகர்த்தனதேர்குலவும் - - ❋
ஆற்றேறுநிகர்த்தவனீகமரோ. - - (௬௨)

மழுவுங்கரவாளமும்வார்சிலையும் - - ❋
எழுவுங்குலிசங்களுமேதிகளும் - - ❋
தொழுவும்வளையும்பலகுந்தமுநீண் - ❋
முழுவெஞ்சுடர்வேல்களுமொய்த்தனவால்.

மீயுற்றுடனுற்றியவெம்படையின் - - ❋
வாயுற்றெழுவெம்பொறிமண்டிவநீள் - ❋
வேயுற்றபெருங்கிரிமீதெரியும் - - ❋
தீயுற்றனவொத்தனசேனையவும். - (௬௪)

நலிவுற்றுநுடங்கிடைநன்னுதலார் - - ❋
பொலிவுற்றணிதேர்மிசைபோயினரார் ❋
கலியுற்றெழுநீள்கனகக்கிரிமேல் - ❋
மலிவுற்றெழுவஞ்சிகண்மானுமென. (௬௫)

கருமாமுகிலன்னகவின்குழலா
பெருமாக்கரியின்பிடர்மேல்வருமா
திருமாமுகிலுக்கிடையேயெழுமின்
வருமாறுநிகர்த்தனவையமெலாம். (௩௬)

விலையுஞ்சரிதாகியவெம்பரிமேல்
சிலைநன்னுதலார்பலர்சென்றனரால்
உலையுட்புனல்வாரியிலாகதியிறல்
அலையுந்திரைமேல்வருமன்னமென. (௩௭)

பரிதூசன்னநெடும்படைதன்னமத
கரிதானவிழ்ந்துகடந்தனரால்
விரிகின்றசெழுஞ்சுடர்வெண்டரளம்
சரிகின்றனநற்சுரயுந்தனையே. (௩௮)

விரையேறியதார்புனைவேளிறைவ
வரையேறுமணிக்கெருக்குதலால்
திரையேறியதண்புனறள்ளநெடுந்
கரையேறியவாளைகணக்கிலவே. (௩௯)

அரியன்னவர்பின்னையார்கடனம்
நெரியும்படியன்னிநெருக்குதலால்
பரியும்மணிமாலைகள்பார்க்கிலர்கீழ்
சரியும்மணிமேகலைதாமறியார் (௪௰)

அரனார்முனியாமதனன்னவர்தோள்
பரநாரியர்கொங்கைபடப்படலான்
ஒருநாளுலவாநிறையாணுதல்பால்
வருநாண்மதனீந்தியமூழ்கிலதால். (௪௧)

வெளிறுஞ்சுடர்வேலிளவேனையான்
பிளிறுங்கரிதுள்ளவிழுந்துபெயர்ந்
தெளிறுந்தனவல்லியொருத்தியையக்
களிறுந்திருவைக்கொடுகட்டினனே. (௭௨)

ஆடுங்கழன்மன்னனனைகருடன்
நாடுந்தருவும்பலநண்ணிநெடுங்
காடுங்கிரியும்பலகண்டுகடந்
தோடுங்குளிர்கோமதியுற்றனரால். (௭௩)

(வேறு.)

கானயாறனைத்தையுங்கடந்துகௌசிக
மானயாருயகோமதியைநண்ணியே
யானையுமிரதமும்பரியுமீட்டமுஞ்
சேனையுமன்னனுஞ்சென்றிறுத்தவே. (௭௪)

தோய்கதிர்வேற்படைசூழ்ந்துநண்ணிட
ஆய்கதிர்முடியினானுற்றைநண்ணினான்
பாய்கதிர்ப்படலையுட்சுருக்கிப்பையவே
காய்கதிர்ச்செல்வனுங்கடலைநண்ணினான். (௭௫)

ஆழவேழ்கருங்கடலதனில்வெய்யவன்
வீழவுமன்னனும்வேந்தர்மக்களும்
எழுயர்யாவரும்பிரதமுங்கட
வேழமுஞ்சிவிகையும்விட்டிறங்கினார் (௭௬)

மண்டலவேந்தருமாதரீட்டமுந்
திண்டிறலமைச்சருஞ்சேனைவெள்ளமும்
தண்டரளம்விளைதவழுமாநதி
வண்டலிலிடமறவந்திறுத்தவே. (௭௭)

பட்டினுமணியினும்படங்கலைந்துவினை *
முட்டியசெம்பொனின்முடிகள்வைத்துமேற் *
கட்டியும்பதாகையுங்கட்டிநீடுரை - .
விட்டனர்மன்னருமின்னாருமே. - .(எஅ)

சண்பகத்தருவினுஞ்சந்தனத்தினும் - - *
திண்பனையகிலினுந்தேவதாரத்தும் - . *
தண்பரும்பலவினுந்தாறுபாய்பசும் - *
பண்படிகரிகளும்பரியும்பூட்டினார். (எகூ)

நிலைமரம்பிளந்திடநிவந்துகுத்திய - *
கொலைமதயானையின்கோடுபோலவே - *
சிலைமதனனையவர்மார்பிற்றேனார் - - *
முலைமதயானையின்கோடுமொய்க்கின. - (அ௦)

மோதுகொண்டலைப்பொருமரியானைதம் *
மீதுகொண்டலைத்தமெய்ம்மெலிவுமாறவே *
தாதுகொண்டலைகுழற்றையலார்முலை - *
மேதுகொண்டொற்றினார்வீரர்மீதெலாம். அக

அகிலொடுசந்தனத்துணியினுக்கிடு - *
துகில்பொதிமணிபுனைபெரியுந்தாமமும் - *
திகிலெனப்பலபலசெக்கர்வானம்வெண் *
முகில்பொதிந்தனவெனவண்டெழுந்தவே.

ஆறிலாதணிபடங்கத்துளேற்றிய - *
மாறிலாத்தளங்கெழுமின் மணிவிளக்கொளி *
தேறலார்த்தகைமையசிலம்பிநூல்பொதி - *
தூறெலாமின்மினித்தோற்றமென்னவே. (அங)

குசைநெடுங்கடும்பரிகொற்றமன்னவன்
வசையிலாநங்குலமடந்தைமாமுலைக்
இசைவற்றென்றுவந்தெட்டிப்பார்த்தெனத்
திசையெலாங்கதிர்விரித்*தெழுந்ததிங்களே.

செங்கயலனையகட்டெரிவைதன்றிரு
மங்கலமுணர்ந்துமண்மடந்தையட்டதோர்
பங்கமிலிரசிதப்பானைமேல்வழி
பொங்கலிற்புதுநிலாப்பொலிந்ததெங்குமே.

பெருத்தவானிலவிடைப்பேதைமாதரைக்
கருத்துறக்காதலர்கலந்துறங்கினர்
வருத்தமுங்காதலும்வராமன்னவன்
ஒருத்தனேதனிக்கிடந்துறக்கநீங்கினான் (௮௬)

உருவெளிநோக்குவனுவப்பனுன்னுவன்
கரவினுலேங்குவன்கலங்குவன்மதி
மரபினுடன்கணெண்மனதுபோம்வழி
இரவுபோவதற்கிடமில்லையோவென்பான் (௮௭)

கொடியமாமதனையுங்கொழுநிலாவையும்
நொடியினுமொருகுறைசொல்லிநோகிலான்
படிகிலாவிழியையும்பாரில்வேர்நிறீஇ
விடிகிலாவிரவையும்வெறுக்கும்வேலையில். ௮௮

மையலுங்கங்குலுமதியும்வாட்டவிவ்
வையந்தெளியவென்றணிவயிற்றினில்
கையினுலறைந்துகூய்க்காமர்வாரணம்
வெய்யவாவிளையவாவெனவிளித்ததே. (௮௯)

---

*எழுந்து-எழுந்த எனவிகாரமாயிற்று.

உடைழிவெங்கதிரவனுதயமுன்னநீ - - *
தாழியுந்திங்களுமார்ப்படங்கின - *
கோழியுமார்த்தன*குக்கிலார்த்தன - *
௦ குழியிற்புள்ளெலாந்துள்ளியார்த்தவே.(௧௰)

நங்குலத்தரசனைநலிந்தபாதகக் - *
கங்குலைத்திங்களைக்கனன்றுதேர்க்டாய் - *
அங்கண்மாஞாலம்விட்டகற்றுவெனெனுச் *
செங்கதிர்க்கடவுளுஞ்சிவந்துதோன்றினான்.௧௧

படர்கெடுத்தறநிலைபரித்தமன்னனுக் - - *
கிடர்விளைத்தெய்தியவிராமடந்தையிப் - *
படவிட்டேகினும்போனதிக்கெலாம் - [ன்.
தொடர்பினென்றெண்ணிலாச்சுடரோயவிரு

அலரிவந்தெழமுரசதிரவாழிபோல் - *
புலரியிலரனடிபூசித்தண்ணலும் - - *
சிலர்சிலசுடர்மணித்தேரிலேறினர் - *
பலர்பலகரிகளும்பரியுமேறினர். - (௧௩)

அந்தமாலாற்றைவிட்டகன்றமன்னவன் - *
முந்தமால்கரிபரிநடப்பமொய்த்துடன் - *
கந்தமாலைக்குழற்கடலுடன்வரச் - *
சந்தமால்வளாத்தடஞ்சாரனண்ணினான். (௧௪)

அரிதகிபலாசமாதிலகமாகினி - - *
விரிமலர்ச்சம்பகம்வெங்கைகோங்கமை - *
சொரிமலர்ச்சுரபுன்னையசோகுதன்னிய - *
வரிமணக்காவிடைவந்துவைகினான். (௧௫)

---

* குக்கில் - செம்போத்து. ஒரு-குளம்.

அலைசினையாடன்மருவியாடவும் - - ❊
மலைமிசைப்பிடியும்வன்களிறுமானவே - ❊
நிலைநுதலாருஞ்செல்வருஞ்சென்றேறினார் - ❊
முலையொடும்புயத்தொடுநிகர்த்தமொய்ம்பிற.

அருவிகளாடுவார்சுனைகளாடுவார் - - ❊
வெருவிவந்தனங்களைமீநிலைநுவ்வார் - ❊
†சருவிமீண்டோடியப்புனமிருவுவார் ❊
மருமலர்கொய்குவார்மலைந்துமீள்குவார். (௧௭)

அருவியுஞ்சுனைகளுமாடிநன்மலை - ❊
மருவியவண்டனுமணைந்தசோலையும் - ❊
பருவரைக்குடியும்பனிக்குப்பாறையும் - ❊
பொருவிலாப்புனங்களும்புகுந்துநோக்குவார்.

அன்றிருந்தணிவளாச்சாரல்வைகியே - ❊
ஞான்றிருள்விடிந்தபின்சோதிவேலினன் - ❊
சென்றிருஞ்சுடர்மணித்தேரிலேறியே - ❊
வென்றிவெம்படையொடுவிரைந்துபோயின
[ன். (௧௯)

வேயிருங்கானமும்வெற்பினுச்சியும் - ❊
மாயிரும்பொழில்களுமடிந்துநண்பொடு ❊
யாயினவிசும்பினையடைந்ததூளியும் - ❊
சேயிருஞ்சுடர்மணித்தேர்கள்செல்லவே. (௨௰)

செந்திறப்பொலன்கதிர்த்தேரினுழிதேய்ந் ❊
தந்திறமவ்வழியனைத்துமாதலால் - - ❊
பன்னிறக்கிரிகளும்பாந்தபாறையும் - ❊
பொன்னிறமேருவேபோற்பொலிந்தவே. (௨௧)

---

† சருவல்-லைசைசெய்தல்.

வானமூர்ந்தெழுந்தமாமலையுமாலிகரித - ❊
தானமூற்றொழுகியதடமுஞ்சாரலும் - - ❊
நானமூற்றெழுநறும்பொழிலு நண்ணிவெங் ❊
கானமூற்றருநெறிகடந்துபோயினான் - (௩௨)

விரிந்தவெங்கமர்களும்வெயிலின்வெந்துநீழ் ❊
சரிந்தமாமலைகளுஞ்சருகுவெந்துமேற் . - ❊
பொரிந்தமாமரங்களும்புகைந்துபாரிசை ❊
எரிந்தெழுகடுங்கரத்தெல்லையெய்தினான். (௩௩)

(வேறு.)

என்றுமமரர்க்குவினையின்றியரன்முப்புரமெரித்தகனலும், வென்றிமதனைப்பொடிபடத்திருநுதற்கனைவிழித்தகனலும், வன்றிரையெறிந்தெழுகடற்குணலைவைத்தவடவைக்கனலும், மொன்றுபடவந்துகுடிகொண்டவணுறைந்தனவெருட்பமெழுமே. - - - (௩௪)

கானமுழுதுந்தெறுகனற்றிரளில்வற்றெழுகதிர்ச்சுடரின்வெந், தானமுறவற்றியுரகத்தலைவெடிப்பவதனுச்சிவழிபோய், வானவெழுந்துபுவிமீதுவிழுகின்றமணிவந்துபகல்வான், மீனம்விழுகின்றபடியாமெனவிலங்கினவெளிப்புறனலாய். - - - (௩௫)

கரும்புயலருந்துளிகரந்துடல்கரிந்தயல்கலந்துநெடிதாய், வரும்பருவமுந்தலைமயங்கிடமழையென்பதுமறந்தவதனால், பெரும்புவிபிளந்ததிலனந்தன்முடியிற்சுடர்பிறங்கியெழுமால், இரும்புவிசிலார்ந்தழலுமிழ்ந்ததனைச்சுடவெழுந்ததெனவே. - - - (௩௬)

சுரப்புறாகிணறப்புனலெனக்கருதிவற்றியது
வட்கியதனால், நிரப்புறாதவிப்பினையொழித்திட
மனத்திடினினைத்துழையெலாம், இரப்பவரை
நீத்துநடத்தியுமோரற்பமுமிரக்கமிலர்பால்,
பரப்பவரை யொத்தனகரப்பவரை யொத்தனப
ச்சாரதமே. - - - - (௱௭)

அடுந்திறலுமவ்வவர் படுந்திறலு நாமமுமனை
த்துமெழுதி, *நடுங்கலு நரம்புனறவிர்ந்துடல்
பதைத்துயிர்நடுங்கியுழலும், கொடுங்கரிமருப்பு
ம்வெருள்கற்றிடருமற்றவர் குவட்டினிடையும்,
நெடுங்கடறடந்திசைகளர்ந்தெனமுழங்குவெநெ
டுத்திரளெலாம். - - (௱௮)

அந்தவெயிலெத்தகல்விசும்பிடை வெடித்துவி
ழுமானையினெடுந், தந்தமணியைத்துளியெனக்
கருதியுண்டிழல்வ சாதகமெலாம், வெந்தெரி
கொளுஞ்சருகெழுந்துவிழுகங்குலில்விரிந்தநிழ
லில், வந்தடருமென்குமரையுங்கடமையுங்கலை
யுமானினமுமே. - - - (௱௯)

மண்மகளுரித்ததிரைவாரிவடவைக்கனலைமாற்
றியிதிலோர், வெண்மணலைவைக்கிலரமங்கையரி
ரும்பதியும்வெந்துவிடுமால், †கண்முழுதையும்
புடைபெயர்ந்துகவருங்கடையுகத்திலிதிலோர்,
நுண்மணறெறித்துவிழினும்பிரளயப்புனலைநு
ங்கிவிடுமால். - - - (௱௰)

* நடுங்கல் - நடப்பட்டகல். † கண் - இடம்.

வெங்கதிர்செறுங்கொடியவின்றுவனம் வெந்தெரியும்வெந்தழலின்வாய், அங்கதமிறந்துமதகுஞ்சரமிறந்துடலெரிந்திடமெலாம், செங்குருதியங்கடலின்மண்டமுதவாரியலைசிந்துநுரைபோல், எங்கணுமிலங்குவனவெண்குவடெனும்பரிசெலும்புமலையே. - (௩௰௧)

வெங்கரியுரித்துடைபுனைந்தவளசலஞ்சலைவிளங்குசடிலச், சங்கரித்திரிசூலதரிதாருகவினாசனிசவுந்தரிசெழும், பொங்கரிமணிப்பரிபுரத்திருபதத்தினள்பொருப்பனைதனைத், தெங்கடனிநாயகியிருந்தசமயத்தியல்பெடுத்துரைசெய்வாம்.

எயித்தசெழுமச்சுடரு மொத்தொருதலத்திடையெழுந்தனவே, வெறித்திருபுறக்கடைசிவந்திடைகறுத்தகண்மிகச்சுழலவே, சிறுத்தவிடையிற்காதலத்தின்முடியிற்றிகழ் செறித்தவரவப், பொறிக்கணபணத்தலைமணிச்சுடிகையிற்கதிர்கள்பொங்கியெழவே. - - (௩௰௩)

பிடித்தவர்களைப்பொருண்மிகுத்தவர்வினைத்தொழில்விளைப்பதெனவே, கொடிப்படர்பொருப்பெனவிடைக்கிடர்விளைத்தன கும்பவழகும், தடித்தினடிநிற்குமிரதத்தைநிகர் பொற்கடிதடத்தினழகும், பொழுத்தெழுவெயர்த்திருமுகத்தழகுநின்றொளிபொழிந்தொழுகவே.

வேலைகளெழுந்தலகமேழினுடனேழையும் விழுங்கிவிடுமக், காலமுடிவிற்கொடியவூழிநெரு

வெங்கனல்கணஞ்சொறிதல்போல், சாலவினைகொண்டுபொருதாருகனை வெம்மறவுணர் தங்கள்குடைணா, யாவையிடிக்கின்றதிரிசூலமிசைவெங்கனல்வளைந்தெரியவே. - - - (௱௰௫)

பொடிப்பொடிதிசைத்திசைதெறித்திடு சுடர்த்திரிபுரத்தழலெனத், தடித்தெழுவலத்ததாதடக்கைவடிவாளொளிதயங்கியெழவே, அடிக்கடியெதிர்த்தலையடித்தெழுமுகக்கடலதிர்ச்சியெனவே, இடிக்குரன்முழக்கெனவிடக்கையின்மணிக்கடகிணாத்தசையவே. - - (௱௰௬)

பட்டயமெடுத்தொருகைபத்திரமெடுத்தொருகைபற்றுமழுவும், * சொட்டையுமெடுத்திருகை சக்கரமெடுத்தொருகைசுற்றுமயிலும், வட்டமுமெடுத்திருகைவச்சிரமெடுத்தொருகைமற்கரதலம், எட்டினும்விதிர்ப்பனசுழற்றுவனவெற்றிழலெழுந்தெரியவே. - - (௱௰௭)

ஆடகமணிக்குழைகள்யாரியசரப்பணிகரத்துகடகம், சூடகமிரட்டையுதாரமொடுபட்டமணிதோள்வளைசெழும், பாடகமெழிற்பரிபுரங்கழல்சதங்கைகள்பதக்கமுடனே, நீடெழின்மதாணிகளலைந்துதிசையெங்குமொளிநின்றடரவே.

நித்திலநிரைத்தவயிரத்திணையழுத்திமுழுநீலநிரவிப், பத்திபடவொப்பரிய பச்சைசவிரவிப், பதுமராகமணவிச், சித்திரமியற்றியமணிக்கலையுமப்பரிசுசெய்துகிரணத், துத்தரியமுந்தொடை

---

* சொட்டை - வளைதடி.

யுமுற்றுநிலவும்வெயிலுமொக்கவிழவே (௱௰௯)

காவன்முறைநிற்பவொருகோடியுளகற்பனை கலைகற்றவருவா, தேவவிடைநிற்பவொருகோடி யுளகூடியபவிடாகினிகண்மேல், ஆவலொடுநிற்ப வொருகோடியுளரன்னெறியமைச்சரொனமே, போவனவுமீள்வனவுமாவவொருகோடியுளபூத கணமே. - - - (௱௨௰)

அச்சமறத்தமதுயிர்க்கொடைபளித்தவரது த்தலையை, வச்சிரமணிக்கடகநற்கரதலத்தினி டைவைப்பசிலவே, இச்சையினரப்படிகளிட்ட தலையைக்கடிதெடுத்திறைவிமுன், பச்சுதிரமுற் றெழுகவைப்பசதகோடிகள்பசாசகணமே.

ஒடுபடுநண்ணிடை நடங்குமிகுசாமரமிரண் டெபுறமும், போடுமவரும்பரிபுரத்திருமலர்த்து ணைபொருத்திமுடிமேற், சூடுமவருங்கவிதொடு க்குமவரும்பவுரிசுற்றிமுறைநின், றாடுமவரும்பி ணைகளிபாடுமவரும்பலவரம்பையர்களே (௱௨௨)

மஞ்சனமெடுப்பவருமாமலர்தொடுப்பவரும் வாள்விழிகளுக்கஞ்சனமளிப்பவருமாரமுதளி ப்பவருமன்னைதிருமுன், கஞ்சனைபிடிப்பவரும் வஞ்சனையறப்பரிகலத்துடனெரித்து, நின்சொல் வழிநிற்பவருமெண்ணரிய கோடிகளிடாகினிக ளே. - - - - (௱௨௩)

பண்ணவர்திரண்டுபகர்மன்றிறனில்வந்தடிப

னிற்றுதொழவே, மன்னவர்விழுந்துதமதெ
ன்னமுடியும்படிவரங்கள்பெறவே, கன்னருவீ
சுரந்துதருகன்னிசமர்த்தனைதத்தவிசின்மேல்,
பெண்ணரசிருந்தனள்பிறங்குசடிலம்புடைபெ
யர்ந்தலையவே. - - - (௱௨௪)

அம்பொனின்மணித்தவிசினம்பிகையிருப்பவ
ரசர்க்கரசனும், கம்பகரடக்களிறுவெம்பரிபதா
திகள்சடைத்தலைநிறீஇக், கும்பமுனிதம்பியொ
டருந்தவர்குலத்தரசர் கூடிவரவே, வம்புகுழ
கொண்டமுலைமங்கைதிருமுன்றிலிடைவந்துதொ
ழுதான். - - - - (௱௨௫)

(வேறு.)

நற்றோணிவிட்டிறங்கி நாயகியைத்தொழுதிறை
ஞ்சி நன்னிராசன், முற்றோநோக்குதலுமு
டிவேந்தன்கருணைவிழிமுனைகடாக்கக், கற்றேரு
ங்கற்பரியுங் கற்சிலையுங் கற்கணையுங் கவினுமன்
னே, பொற்றேரும்பொற்பரியும்பொற்சிலையு
ம்பொற்கணையும்பொலிந்தவன்றே. (௱௨௬)

முன்னொளிர்கல்லானமுடித்தேருவாம்பரியு
மூரிவில்லும், பொன்னுக்கண்டிறைவன்புந்தி
மகிழ்ந்ததிசயித்துப்புளகமெய்த்தி; வன்னுகவந்
தநீறுவனக்கருத்துடவ்வரைவிவிருண்டமேனிப்,
பொன்னருங் கரபமூலைப் புரிசடையாண் மணி
வாயிற்புறத்துவந்தாள். - - (௱௨௭)

மாதங்கிவந்திடலு மலர்க்கரங்கண் முடிமீது
வைத்துச்செம்பொற், பாதங்கண்மிசைவீழ்ந்து

பணிந்தெனதுதவப்பயந்தான்பலித்ததென்றுப்
பூதங்கள்விளையாடுந்திருவாயிற்கதற்றேர்போய்ப்
போற்றேரானை,தீதென்றுநீயருள்வாயெனக்கே
ட்கக்குமரியெடுத்தியம்பலுற்றாள். (௱௨௮)

உவராழிடன்றனைசெயொழித்தகளுமடல்வரு
ணனுலகில்யாரும், சுவராதுபொற்றேனைக்கற்
றோரகச்சபித்தக்கண்முன்காட்டி, எவராலுமி
றநோக்கிலிவ்வுருப்போய்ப்பண்டையுருவெய்
துமாகில், அவராகுமிதற்குரியோரவர்தமக்கே
கொடுப்பதெனவளித்துப்போனான். (௱௨௯)

மன்றேகெளன்றுடையாமனிவாயிறனில்வரு
ணன்வைத்துப்போனை, அந்நாடொட்டிந்நெறி
நாளரவாகக்கல்லாய்த்தின்னருட் கண்டேறுக்கப்,
பொன்றனைசெழுந்தேர்நீகொடுபோவென்றினி
தனிக்கட்புகழ்ந்தயோதி, நன்றுடன்றன்வாங்
கிரவமணித்தேராதிலேறிநடத்தினனே. (௱௩௰)

(வேறு.)

வாள்செலச்சிலைசெலமாதரார்செல - *
ஆள்செலத்தேர்செலவானைசெல்லநீள் - *
தோள்செலுஞ்சுடர்மணித்தொடியினன்பல - *
நாள்செலக்கேறிமாநாட்டைநண்ணினான்.

*
தாழையின்முதிர்பழங்கழகின்றுறுதே -
மாழையின்கனிவிழைவருக்கையின்பலம் *
கூழைவெண்குரங்கயல்குதிப்பக்கூன்குலை - *
வாழையின்கனியெலாமடியவீழுமால். (௱௩௨)

கூன்கடுவன்றலைக்குரும்பைவீழ்தலின் - - ※
தீன்கனிவருக்கையிற்புதைத்தசெம்முக - ※
வான்கலிவால்பிடித்திழுத்துமந்திமுன் - ※
தான்கொடுகதலியம்படப்பைசாருமால். (௱௩௩)

பல்வளைமணிகளும்பதுமராகமும் - ※
திலவெழுவெயிலெழுநீலம்பங்கயம் - - ※
புலரியுமாலையும்புகுதலில்லென - - - ※
மலர்தலுங்குவிதலுமறந்தவாவியே. - (௱௩௪)

தாள்களுந்துடைகளுந்தையலார்மணித் - ※
தோள்களுமுலைகளுஞ்சோலைகாட்டுவ - - ※
நீள்கனங்குழைகளுமுகமுநீலக்கண் - ※
வாள்களும்வாய்களும்வாவிகாட்டுமே. (௱௩௫)

திகுதிகென்றலைபுனன்மதகுசிந்தவும் - - ※
பகுதியுட்பகுதியும்பற்றறுதன - - ※
வெகுதிரைப்பேரொலிவேலையேழுமுள் - ※
புகுதினுநிறைவுறுவளவில்பொய்கையே (௱௩௬)

துகிரினுஞ்சிவந்ததாட்டுணைவெண் பேடையோ
டுகிரினுமலகினுமொடுக்குமீனுடன் - - ※
திகிரியம்புள்புடைபெய※ரத்தின்சிறை - ※
பகிரினீர்கடையுகப்பௌவமன்னதே. (௱௩௭)

கூடியபிறநலக்கொள்கைகண்டழன் - ※
றாடியவோதிமமொளித்ததாமரை - - ※
வாடியவாறுகண்டாவிமாய்ந்திடத் - - - ※
தேடியசேவறன்னுளந்தெளிந்திடும். (௱௪௮)

※ அத்தின்சிறை - அத்தினியபொய்கைக்கரை.

காற்றினிற்கலைந்துயர்சினையிற்கான்றதேன்
ஆற்றினிற்பாந்தகல்வாவியணபியே
சேற்றினிற்பழுகியவயலிற்செந்நெறவின்
நாற்றினிற்பாரப்பனநாலுபாலுமே. (௱௩௯)

பிணையனவிழியினார்நடைபெறக்கெழீஇத்
துணைபுணரோதிமந்தொடர்ந்துபின்வரத்
திணைபலபடர்ந்துதிண்டேரிழிந்துமன்
இணைமருப்பியானையினெருத்தத்தேறினான்.

இடியெனமுழங்கிடவியம்பியங்களால்
வெடிபடுமுலகமும்விசும்புமென்னநீள்
கொடிகளுங்குடைகளுங்குழுமக்கொற்றவன்
கடிகமழ்கங்கையின்கரையைநண்ணினான். ௱௪௧.

முன்னோர்முனிவரன்மொழிந்தசாபத்தால்
பன்னகத்தரிதுயில்பாற்கடற்கணே
பொன்னகர்வரரெலாம்புக்கதாமென
மன்னவன்கங்கையில்வந்திறங்கினான். (௱௪௨)

மின்னிறநுண்ணிடைமின்னனார்முலைச்
செந்நிறச்சுண்ணமுந்திமிர்ந்தசாந்தமும்
நன்னிறக்குங்குமச்சுவடுநண்ணிவான்
வின்னிறமொத்ததுவிமலநீத்தமே. (௱௪௩)

வளைசெறிவேழமுமாவின்கூட்டமும்
விளைசெறிதார்ப்புயவேந்தமக்களும்
பிரசமாமலர்க்குழற்பேதைமாதரும்
அரசனுங்கங்கைநீராடியேறினார். (௱௪௪)

அங்கைவேன்மன்னவனருளினோக்கினோ - *
மங்கைதன்கற்பினோவமைச்சர்மாண்பினோ *
வெங்கயற்கட்பெருவெள்ளத்தோடும்போய்ச் *
கங்கையைப்பெரும்படைக்கடல்கடந்ததே.

அன்னமாடுந்துறையகழும்வாவியும் *
வன்னமாமதில்களுமாடகூடமும் - *
பொன்னின்மாமேடையும்பொலிந்துதோன்ற
கன்னமாபுரிதனைக்கண்ணினோக்கினன். [வந்

இந்நகரெந்நகரென்றுகூறவே - *
முன்னவற்குணர்த்தியமுனிவர்நோக்கியே - *
மன்னவசொன்னவவ்வல்லிவாழ்திரு - *
நன்னகரீதெனநயந்துகூறினார். - (௱௪௭)

வல்லிதனகரிதுமன்னவாவெனச் - *
சொல்லியபொழுதினிற்றுணுக்கமெய்தியே *
அல்லியந்தாரினனவளையின்புறப் - *
புல்லியகலவியிற்புளகமெய்தினன். (௱௪௮)

(வேறு.)

சனந்தொடர்ந்துபின்வரத்தடங்கடந்துசென்றுவெகு,சினந்தொடர்ந்தவெம்பரித்-திரிசங்குசுந்தமைந்தனும், மனந்தொடர்ந்துகொண்டவல்லிமன்னுகன்னமாபுரிக், கனந்தொடர்ந்தமாமதிற்கபாடவாயிலெய்தினன். - - (௱௪௯)

மடங்கலூற்றவாயிலேறுமகரதோரணங்களும்,* இடங்கணிப்பொறிப்பரப்புமென்னிறந்த

* இடங்கணி - சங்கிலி.

மாமதிற், கிடங்கடங்கநீன்முழங்கினர்ந்தெழுந்தக
ஞ்சமும்,இடங்கருங்கணங்குமீனினங்களும்பெ
ருந்தவே. - - - (௫௰)

நிகரிலாதபொற்குவட்டையுட்டிறந்து நீணி
லா, நகரியெங்கும்வைத்ததொத்தநகருமாடகூ
டமும், சிகரநேமிவரைதிரித்ததன்புறஞ் செறித்
தநீர், மகரவாரியொத்தசெம்பொன்மதிலுநீள்
கிடங்குமே. - - - (௫௧)

பங்கயச்சகாயவன்னைநன்குலப்பிரதன் *
அங்கண்வானகத்துநின்றொராறழைத்தனன் மு
னம், மங்கையைப்பயந்தமன்னன்மாநகர்க்கு
ளெண்ணிலாக், கங்கைநற்றுறைகளெனக்கவித்த
கேதனங்களே. - - (௫௨)

விண்டலத்துமாதரிந்தமேதினிக்கிறங்கவும் *
மண்டலத்துமாதர்வானின்வண்மைசென்றுகா
ணவும், கொண்டல்விற்படுச்சமைத்தகூடமா
டகோபுரம், அண்டரண்டமூடறுத்தநற்குமப்
புறத்தவே. - - - (௫௩)

நெடியமாடநேத்திரத்தினாவகுத்தசாளர
த்,திடையில்மாதரொண்முகங்களெங்கணும்பி
றங்குதல், கடிகொள்வெற்பின்மீதெழுந்தகதிர்
தனைத்துளைத்ததின்,நடுவிருந்தளிர்மதுக்குதிக
ளைப்பொலிந்ததே. - - (௫௪)

அலங்கறங்குவேலினானனீகவெள்ள மந்நகர்ப், பொலங்கலந்த மாமதிற்புறம் பொரா நிறைந்தபின், நிலங்கவர்ந்திடச்செறிந்தநீலவேலைபோலுமேமார், பிலங்கலந்த தென்னவேபெருந்தவாயில்புக்கதே. - - - (௧௫௫)

தோரணத்து நீழன்மன்னுசோதிரத்நவேதிகைப், பூரணக்குடங்களும்பொலிந்திலங்குதீபமும், காரணத்தமைச்சர்தந்தெருக்களுங்கடந்துபோய், வாரணத்திழிந்துமன்னன்மண்டபத்திலெய்தினான். - - - (௧௫௬)

தருவிருந்தகரனிருந்தசபைகொண்மண்டபத்திலே, மருகன்வந்துபுகுதலுந்தன்மனமகிழ்ந்துமதிதயன், அருகிருந்தவரசரோடுமாதனத்திழிந்துபோய், இருகரங்களினுகரம்பிணைந்தெதிர்நடந்துதழுவினான். - - - (௧௫௭)

முனிவருக்குமரசருக்குமுழுதுமாதனங்கொடுத்து, இனிதுகூறியவ்வவணியாவருமிருந்தபின், அவனிகவேலமதிதயன்றனதனத் திருந்துவம், கனியவாச முகமலர்ந்து கண்களிப்ப நோக்கினன்.

வெற்றிமன்ன னும்மனம் விரும்பிவந்தமன்னரும், சுற்றிநின்ற மாதருந் துலங்குதாரமைச்சரும், பற்றியுற் றெறிந்த கண்கள் பசுமரத்திலாணிபோல், சற்றிமைக்கிலாது வள்ளறன்முகத்தைநோக்கினர். - - - - (௧௫௯)

(வேறு.)

